
Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
மலர் 10
இதழ் 84
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் இலை சித்திரை 23 ஸபர் 6 ஞாயிற்றுக்கிழமை (5-5-68)






# கொடூரமான உத்தரவு; உடனே நீக்குங்கள்



## பாவனைப்பொருள் கட்டுப்பாடு: பிரதமருக்கு 'செல்வா' கடிதம்

கொழும்பு, சனி

குறிப்பிட்ட அளவு பொருள்களைத்தான், யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வசிக்கும் மக்கள் பாவனைக்கு வைத்திருக்கலாம் என அவசரகாலச்சட்டத்தின் கீழ் நிதிஅமைச்சர் பிறப்பித்திருக்கும் உத்தரவு, கொடூரமானது. "இந்த உத்தரவு உடனடியாக நீக்கப்படவேண்டும்" என்று தமிழரசுக்கட்சியின் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதிய அவசரக் கடிதமொன்றில் கேட்டிருக்கிறார்.

திரு. செல்வநாகம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோவளம் முனையில் இருந்து சுண்டிக்குளம் வரை கடற்கரையோரமாக உள்ள ஐந்து மைல் உள்பிரதேசத்துக்குள் வசிக்கும் மக்கள் இரண்டு இறாத்தல் அல்லது ஒரு டின் பால்மா, இரண்டு டின் கட்டிப்பால், ஒரு போத்தல் மோல்ட்டட் மா அல்லது ஒரு டின் ஓவல்டின், மிளகு, சாதிக்காய், ஏலக்காய், கறுவா, கராம்பு, பாக்கு ஆகியவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இறாத்தல்தான் வைத்திருக்கலாமென்றும், ஒரு கைக்கடிகாரம், இரண்டு போல்ட்பெயின் பேனா, ஒரு பவுண்டன்பேனா, ஒரு சைக்கிள் டயர், ஒரு ரியூப் ஆகியவைகளே வைத்திருக்கலாமென்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நிதிஅமைச்சர் விசேஷ உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மக்களைப் பாதிக்கும் ஒரு கொடூரமான சட்டவிதி இது. இந்தச்சட்டவிதிகள் இம்மாதம் 10-ந் திகதி அமுலுக்கு வரவிருக்கின்றன.

இந்தச்சட்டவிதிகளை உடனடியாக நீக்கும்படி நிதிஅமைச்சருக்கு உத்தரவிடும்படி யாழ்ப்பாண மாவட்ட மக்களின் சார்பிலும் எங்கள் கட்சியின் சார்பிலும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### மோதல்பற்றி நீதிவிசாரணை

சென்னை, மே 4

கடந்தமாதம் நடைபெற்ற சென்னை மாணவர்-பஸ்போக்குவரத்து ஊழியர் மோதல்கள்பற்றிய தனிமனித நீதி விசாரணைக் கமிஷன் நேற்றுத் தனது விசாரணையை ஆரம்பித்தது.

கட்டுப்பாட்டுப் பொருள்

## கூடுதல்வைத்திருக்க விரும்புவோர் அனுமதி பெறவேண்டும்

### விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் அதிகரிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மேலும் அதிக விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள் இதற்காக ஒரு கணிசமான தொகையை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இம்மாத முடிவுக்குள் மேலும் சுமார் 15 விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள் இங்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிகின்றது. இங்கு அதிகரித்துவரும் விலைக்கட்டுப்பாட்டு மீறலைக் கட்டுப்படுத்தவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருப்பதாக நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தெரிவித்தார்.

வடபகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் என பிரகடனப் படுத்தப்பட்ட பகுதிக்குள் ஒருவர் இரண்டு போத்தல்களுக்கு மேல்சாராயம் வைத்திருக்க முடியாதென கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது ஏற்கனவேயே ஒருவர் இரண்டுபோத்தல்களுக்கு மேல் சாராயம் வைத்திருக்க முடியாதென சட்டம் இருந்து வருகின்ற போதிலும் இம்மாதம் 10-ம் திகதி முதல் இப்புதிய உத்தரவு கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுமென்றும் அனுமதியின்றிக் கூடுதல் சாராயம் வைத்திருப்பவர்கள்சுங்க இலாகாவினர்களுக்கிணங்க நடபகுக் கைக்குட்படுத்தப் படுவார்களெனவும் திரு வேணன் அபயசேகரா இங்கு தெரிவித்தார்.

கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட குறிப்பிட்டபொருட்களை குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக வைத்திருக்க விரும்புபவர்கள் தகுந்த காரணம்காட்டி அரசாங்க அதிபரிடம் அனுமதிபெற அரசாங்கத்தால் 6 வாரம் தவணை வழங்கப்பட்டுள்ளது.

## அண்ணு இன்று டோக்கியோ சேர்வார்

வாஷிங்டன், மே 4

தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை நாளை ஜப்பான் தலைநகரான டோக்கியோ சென்றடைவார். திங்கட்கிழமை அவர் அமெரிக்காவிலிருந்து திரும்புவதாக இருந்தபோதிலும் அமெரிக்காவில் அவர் தமது பயணத்தைக் குறைத்துக்கொண்டதால் நாளை டோக்கியோ செல்கிறார். டோக்கியோவில் சுமார் 6 நாட்கள்வரை தங்கியிருப்பாரென அறியப்படுகிறது.

டோக்கியோவில், ஜப்பான் வெளியுறவு மந்திரி, உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் ஆகியோரை அண்ணுதுரை சந்திக்கவிருக்கிறார். டோக்கியோவில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றையும் திரு. அண்ணுதுரை பார்வையிடுவார்.

## 'சிறுபான்மைத்தமிழர் அஞ்சத் தேவையில்லை'

### மாவட்டசபை வருவது பற்றி உள்ளூராட்சி மந்திரி உறுதி

குரும்பசிட்டி, சனி

'மாவட்டசபைகள் தேசிய அரசாங்கத்தினுல் கட்டாயம் நிறுவப்படவிருக்கின்றன. சிறுபான்மைத்தமிழ்ச் சமூகத்தவர்களைச் சேர்ந்த எவரும் மாவட்டசபைகள் தங்களுக்கு ஆபத்தையும் தீங்கினையும் ஏற்படுத்துமென அஞ்சத்தேவையில்லை தமிழரசுக்கட்சியைப்பொறுத்தமட்டில் தீண்டாமையை நீக்குவது கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும், கட்சி, மக்கள் மத்தியிலிருந்து அழித்தொழிக்கப்பட்டாலும் சரி, எம். பி. பதவிகளுக்கு ஆபத்துவந்தாலும் சரி தீண்டாமையை ஒழிப்பதில் செயலாற்ற தமிழரசுக்கட்சியினர் பின்வாங்கமாட்டார்கள்.''

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தினரால் நிறுவப்பட்டுள்ள புதிய தையல் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்

[6-ம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதி எம். பி. யை மீண்டும் கட்சியில் சேர்க்க கோரிக்கை

### தமிழரசு ஊர்காவற்றுறை மாவட்ட கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழரசுக் கட்சியில் தீவுப்பகுதி எம். பி'யை மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரும் ஒரு தீர்மானம் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை மாவட்ட கிளைக் கூட்டத்தில் நேற்று நிறைவேற்றப் பட்டது. திரு. நவரத்தினத்தை கட்சியிலிருந்து வெளியேற்றியது சரியான செயல் அல்லவென்றும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

அடையாள அட்டை [illegible] பாராளுமன்றத்தில் பேசியதற்கான தமது நிலையை விளக்கி தீவுப்பகுதி எம். பி. கூட்டத்தில் பேசினர். தமிழரசுக் கட்சியின் நிலையையும் அடையாள அட்டை மசோதாவை கட்சி எதிர்க்காமலிருப்பதற்கான காரணத்தையும் விளக்கி கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை பேசினர்.

கட்சியின் அடிப்படைக் கொள்கையை விட்டு தீவுப் பகுதி எம். பி. திரு. நவரத்தினம் விலகவில்லையென்றும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய திரு. நவரத்தினத்தை விலக்கியதன் மூலம் கட்சியும் தனது கொள்கையிலிருந்து விலகவில்லையென்றும், இந்த நிலைமையில் யார் செய்தது சரியென்று கூறுவது கடினமான செயலென்றும் திரு. கதிரவேற்பிள்ளை கூட்டத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

குழுக் கூட்டம் மிகவும் உணர்ச்சி கொந்தளிக்கும் நிலையில் ஆரம்பமானது. நாரந்தனை கிராமசபைத் தலைவர் திரு. ச. அருமைநாதர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். (நன். நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அன்பினாலேயே நாத்திகரையும் ஆத்திகராக்கலாம். சாமதானபேத தண்டங்களால் இது முடியாது. அன்பு மிகத் தூய்மையானது. மகத்தானது. பிறரைக் கண்டிக்காது. தண்டிக்காது. அதில் உயர்வு தாழ்வுக்கும் இடமில்லை.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 4[illegible] Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 23ந் திகதி (5-5-68)

# இவர்களுக்கு மட்டும் ஒரு சட்டமா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோவளம்முனையிலிருந்து சுண்டிக்குளம் வரை கடற்கரையோரமாக உள்ள ஐந்து மைல் உள்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளில் இனி ஒரு இருத்தல் இரண்டு இருத்தல் படிகள் இரண்டும் ஒரு தராசும் வைத்திருப்பது நல்லது. பாவித்ததுபோக பெட்டிசட்டிகளில் மிகுதியாக வைத்திருக்கும் மிளகு, கறுவா, ஏலம், பாக்கு, சாதிக்காய், கராம்பு முதலிய பொருள்களை அடிக்கடி நிறுத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பொருள்கள் ஒரு இருத்தலுக்கு அதிகமாக இருந்தால் அவர்கள் குற்றவாளிகள். அவர்களுக்குத் தண்டனை கிடைக்கும். இரண்டுருத்தல் பாமா, இரண்டுடின் கட்டிப்பால், ஒரு 'மோல்டட்மா' போத்தல், இரண்டுபவுண்டன்பேனை, ஒரு 'போல்ட் பொயின்ட்பேனை, ஒரு சைக்கிள்டயர் ஒரு சைக்கிள் டியூப் ஆகியவைகளைத்தான் அவர்கள் வைத்திருக்கலாம். இந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் பொருள்களை என்ன செய்வது; அதிகமாக வைத்திருப்போருக்கு என்ன தண்டனை? இவற்றுக்கு இன்னும் விளக்கம் தெரியவில்லை, இந்தச் சட்டவிதிகள் இம்மாதம் பத்தாம் திகதி அமுலுக்கு வரும்போது இதற்கான விளக்கம் தெரியக் கூடும்'

பயறு இல்லை, சர்க்கரை இல்லை, புளிஇல்லை, மிளகாய்இல்லை என்று நாளாந்தம் 'இல்லை' என்று வீட்டில் பெண்கள் அழுது வடிவதுடன் 'பால்இல்லை' என்று குழந்தைகள் 'ஓலம்' வைக்கின்றன. இப்பொருள்கள் தட்டித்தவறி எங்காவது கிடைத்தால் என்ன பாடுபட்டாவது அவற்றை வாங்கிப் போடுவோம்' என்று நினைத்து அவற்றை வாங்கினாலும் இப்பகுதிமக்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவற்றை வைத்திருக்கமுடியாது வாங்கிய பொருள் (குறிப்பிட்ட அளவு) முடிந்ததும், அந்தப் பொருள்கள் மீண்டும் கிடைக்குமா? கிடைத்தாலும் நிச்சத்தவுடன் வாங்குவதற்கு எல்லோரிடமும் எந்நேரமும் பணம்இருக்குமா?

கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இதன்படி இப்பகுதியிலுள்ள எந்த ஒரு வீட்டுக்குள்ளும் எந்தச்சமயத்திலும் இராணுவம், கடற்படை, பொலிஸ்படையைச் சேர்ந்த எவரும் நுழைந்து சோதனையிடலாம். இவர்கள் தவிர உணவுக் கட்டுப்பாட்டிலாகா அதிகாரிகளும் வீட்டுக்குள் புகுந்துசோதனை செய்யலாம். வீடுபுகுந்து சோதனை செய்வதென்பதை சுலபமாக உத்தரவிட்டுவிடலாம். ஆனால் அந்த வீட்டிலுள்ளவர்கள் எத்தனை தொந்தரவுக்குள்ளாக வேண்டுமென்பது உத்தரவு பிறப்பிப்பவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அவசரகால நிலையில் இப்பகுதியில் இராணுவத்தினர் எப்படி நடந்துகொண்டார்களென்பது இப்பகுதிப் பிரதிநிதிகளுக்குத் தெரியாத விஷயமல்ல. பார்லிமெண்டில் பல தடவைகள் பலரும் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கின்றனர். சமீபத்தில்கூட இந்தக் கட்டுப்பாட்டினால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஊர்காவற்றுறைப் பிரதிநிதி எடுத்துக்கூறி எச்சரித்திருந்தார்.

கள்ளக்கடத்தல் எங்கே, எப்படி நடந்தாலும் அதைத் தடுக்கவேண்டியது அவசியம். கள்ளக்கடத்தல் யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும்தான் நடைபெறுகிறதா? கல்பிட்டி, இரத்மலானை, கட்டுநாயகா, காலி, நீர்கொழும்பு, கொழும்பு முதலியஇடங்களில் நடைபெறவில்லையா? ஒருபிரதேசத்தைமட்டும் கள்ளக்கடத்தல் பிரதேசம்என்று பிரகடனப் படுத்துவது அப்பகுதிமக்களை அவமானப்படுத்துவது மட்டுமல்ல அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தையும் ஒப்புக்கொள்வதாகிறது. அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு. அவை பங்கீட்டு முறையில் விநியோகம், இதையும் மீறி கடத்தல் என்றால் இத்தனை பங்கீட்டு முறையும் அவற்றைச் செயல்படுத்துவதற்கு அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் எதற்கு?

நாடு முழுவதற்கும் யாழ்ப்பாணப் பகுதி போல் கட்டுப்பாட்டு முறை கொண்டுவந்தால் அர்த்தமும் நியாயமுமிருக்கும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நமது வடபகுதிப் பிரதிநிதிகள் நிலைமையைச் சரிவர அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறி இப்பகுதி மக்களுக்கு மட்டும் அநியாயமான சட்டதிட்டங்களைக் கொண்டு வருவதைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும்.

திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இந்தக் கட்டுப்பாட்டு உத்தரவுகளை உடன் நீக்கவேண்டுமென பிரதமரைக் கேட்டுக் கொண்டிருக்கும் செய்தி கடைசிநேரத்தில் கிடைத்திருக்கிறது. பிரதமர் இதற்குச் செவிசாய்ப்பார் என நம்புவோம்.

# "தனித்துவச் சிறப்பு வாய்ந்தது சைவ சமயம்"

— தத்புருஷ தேசிகர்

அச்சுவேலி, சனி

"வேத சிவாகமங்கள் இறைவனால் ஆக்கப்பட்டவை. அதன்வழிநின்று நாம் ஒழுகவேண்டும். வேத சிவாகமங்களின் சாரமே தேவார திருவாசகம் முதலியனவாம். இவற்றின்மூலம் எந்தச் சமயத்துக்கும் இல்லாத தனிப்பெரும் சிறப்பு சைவசமயத்துக்குண்டு" என புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை சபையாரால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் குறிப்பிட்டார்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

"விதிமுறைப்படி அமைந்த ஆலயங்களில் விதிமுறைப்படி எக்காரியத்தையும் செய்வதே நாம் இறைவனுக்குச் செய்யும் கைமாறு. சிவாகம விதிமுறைப்படி நாம் நடக்கத் தவறினால் இவ்விதிகளை அருளிய கடவுளை ஏமாற்றியவர்களாகிவிடுவோம். தாய்மாரும் மற்றோரும் சிறுபராயம் தொட்டே பிள்ளைகளுக்குச் சமயப்பற்றை ஊட்டக்கூடிய முறையில் ஒழுகுதல் வேண்டும்" என ஸ்ரீ தேசிகர் மேலும் சொன்னார்.

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஆகமவிதிநின்றே சைவத்தை வளர்த்தார் என்றும் அவரால் எழுதப்பட்ட சைவ வினாவிடை: நான்காம் பாலபாடம் முதலியன இதற்குச் சான்றாகுமென்றும் சொன்னார்.

திரு. மு. வைத்தியலிங்கமும் பேசினார்.

# அன்பைப் பெறுவதன் மூலமே சமூகத்துயர் துடைக்கலாம்

## நூல் வெளியீட்டு விழாவில் விரிவுரையாளர்

உடுப்பிட்டி, சனி

"சமுதாய ஏற்றத் தாழ்வுகள் வாழ்க்கையையே சிதைத்து விடக்கூடியன, சமுதாயக் குறை பாடுகளைப் போக்க சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த நாங்கள் காலச் சூழ் நிலைக்கேற்ப கல்வி மூலமாகவோ, கலை மூலமாகவோ, வாழ்க்கை மூலமாகவோ குறைபாடுகளைத் திருத்த வேண்டும். பிற சமூகத்தினரின் அன்பைச் சம்பாதிப்பதின் மூலமே எமது சமூகத்தவரின் துயர் துடைக்கலாம்."

இவ்வாறு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நவாலியூர் திரு நா. செல்லத்துரையின் "முகைவெடித்த மொட்டு" நாவல் அறிமுக விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளர் திரு. எஸ். நாகேந்திரா கூறினார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு எம். எஸ். சின்னத்தம்பி ஜே. பி. நாவலின் முதற் பிரதியைச் சமரபாகு அ. த. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு வே. சின்னத்துரைக்கு வழங்கினார். தலைவர் தனதுரையில் பாரதி சகாப்தத்தின் பின்னர் இன்று தமிழிலக்கியம் அரிய முன்னேற்றம் அடைந்துள்ளதென்றும் எழுத்தாளர்களைக் கௌரவித்து அவர்களது வாழ்க்கைக்கு உதவி செய்தாலே சிறந்த இலக்கியங்கள் தோன்ற முடியுமென்றும் குறிப்பிட்டார்.

சைவப் புலவர் திரு சி. வல்லிபுரம் பேசும் பொழுது "ஒரு எழுத்தாளனின் படைப்பில் குறைகள் காணப்படினும் முகமனுக்காக அவற்றைப் புகழுவது கூடாது. இது மேன்மேலும் எழுத்தாளர் தவறான வழியில் செல்ல வழி வகுக்கும் குறைகளைத் துணிகரமாக எடுத்து விளக்க வேண்டும். இதுவே இலக்கிய உலகுக்கு நாம் செய்யும் மகத்தான தொண்டாகும். இக்கால இளம் பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களாகத் திகழவில்லை. ஆண்களே நாணும்படி நடந்து கொள்கிறார்கள் இவற்றை நாவல் மூலம் தெளிவுறுத்திப் பெண்களுக்குக் கட்டுப்பாடு அவசியம் என ஆசிரியர் தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டுள்ளார். இளம்பெண்களின் சீரழிவுக்கு அவர்களின் பெற்றோர்களே காரணம்" என்றும் அவர் சொன்னார். திரு எம். வேதாரணியம், திரு வ. தர்மலிங்கம், காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு கே. நடேசன் ஆகியோரும் பேசினர். நூல் ஆசிரியர் திரு நா. செல்வத்துரை நன்றி கூறினார்.

# பாரிஸ் பேச்சு

நடக்குமா, நடக்காதா? என்ற சந்தேகம் இப்போது நீங்கியிருக்கிறது. ஆமாம் வியட்னாம் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வுகாண்பதற்காக அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகளும் வடவியட்னாம் அரசாங்கப் பிரதிநிதிகளும் பிரான்சின் தலைநகரான பாரிஸ் நகரத்தில் அடுத்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

எங்கே பேசுவது என்ற பிரச்னை நீங்கிவிட்டது. எப்படிப் பேசுவது, என்ன பேசுவது என்ற பிரச்னையும் நீங்கிவிடும். தீராத பிரச்னையாகக் கருதப்பட்டு, உலக அமைதிக்கே தீங்கு விளைவிக்கலாமென அச்சமூட்டிவந்த வியட்னாம் பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்க இப் பேச்சுவார்த்தைகள் வழிவகுக்க வேண்டுமென்பதே உலக அமைதியை விரும்பும் மக்களின் பிரார்த்தனை. வியட்னாம் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களும் சம்பந்தப்படாதவர்களும் இந்த முயற்சிகளுக்கு உதவியும் ஒத்துழைப்புமளித்து வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

# கல்விப்பகுதி சுற்றுநிருபம்

புன்னாலைக்கட்டுவன், சனி

அரசாங்கத்தால் வழங்கப்படும் விளையாட்டு நிலங்களை பாடசாலை அதிபர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் சிரமதான மூலம் திருத்த வேண்டுமென்றும் அவ்வாறு திருத்த முடியாவிடின் அவற்றுக்குரிய காரணங்களை அதிபர்கள் தெரிவிக்கவேண்டுமென்றும் கல்விப் பகுதிச் சுற்று நிருபம் ஒன்று கூறுகிறது.

# ஐயாறன் எழுதுவது

அடுத்த வாரம் ஆரம்பமாகும் காரைநகர் சிவன் கோவில் திருப்பணியில் ஒரு விசேஷம். இந்துக் கல்லூரி, பால்டன் கல்லூரி இங்கு படிக்கும் பெரிய மாணவர், கோவில் திருப்பணிக்கு சிரமதானம் செய்ய முன்வந்துள்ளதாக அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது.

அதுமட்டுமல்ல. அங்கு வேலைசெய்ய வரும் தொழிலாளரில் சிலரும் சில நாட்கள் இலவசமாகத் தொண்டு செய்வலாமென்று அறியவந்தேன் சிரமதானம் செய்யும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக உணவு அளிக்கப்படுமாம்.

அலைமகளும், கலைமகளும் சேர்ந்து அருள் செய்யும் காரைநகரிலுள்ள மக்கள் பக்தியிலும் யாருக்கும் பின்வாங்கியவரல்ல. ஒரு சில புண்ணியவான்கள் இத்திருப்பணிக்குப் பெருந்தொகை கொடுக்க முன்வந்துள்ளனராம். பலர் வாக்குச்செய்துள்ளதாயும், இம்மாதம் 8-ந் திகதி முதல் 10 வரை பாலஸ்தாபன விழா நடப்பதாகவும் அதைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் ஆரம்பித்துவிடுமென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார். கோவில் திருப்பணிக்கான கருங்கல் வேலைகள் பூர்த்தியாகிவிட்டனவாம். ஈழமே பெருமைப்படத்தக்க முறையில் இக்கோவில் திருப்பணிகள் பூர்த்தியாகுமென்பதில் ஐயமில்லை.

ஃ ஃ ஃ

சைவ சமூகத்தில் பிறந்தும் சிலர் வந்து தரிசிக்க முடியாதபடி அந்த ஆலயத்தில் ஒரு வழக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

உலகம் போகிற போக்கில் நாளா வட்டத்தில் இவ்விதம் சைவர்களிலேயே வேற்றுமைப்படுத்தும் வழக்கம் நீங்கிவிடத்தான் போகிறதென்றும், பலாத்காரம் தான் கூடாதென்றும் தம் வீட்டிலேயே ஹரிஜனங்களை வரவேற்று சம ஆசனம் கொடுத்து தேநீர் உபசாரம் செய்வதாகவும் ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கும் இயக்கத்தில் முன்னணியாக நிற்கும் ஒரு தலைவர் தெரிவித்தார்.

இறைவனுக்குத் தெரியாதா இதெல்லாம்? அவனின்றி ஓரணுவும் அசையாதென்பதில் திட நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள். சிதம்பரம் நடராஜா, மதுரை மீனாட்சி முதலியவர்களே தன் பக்தர்கள் அனைவரும் வேற்றுமையின்றி வந்து தரிசிக்கத் திருவுள்ளம் கொண்டுவிட்டனர். ஈழத்துச் சிதம்பரேசனின் கருணை அதற்குக் குறைந்ததா? ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேசப் பெருமான் தன் பக்தர்கள் மனதில் புகுந்து, தக்க சமயத்தில் கருணை செய்வாரென்றே நம்புவோம்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலே முதல் முதலாக ஸ்ரீ லங்கா குரு பிரம்ம வித்தியார்த்த சபை மாணவர்கள் சென்ற புதனன்று சங்கர ஜயந்தி விழாவை கணபதீஸ்வர குருகுலத்தில் பக்தியுடன் கொண்டாடினர். ஆதிசங்கரரின் வீர வரலாற்றையும் அக்காலத்திலே இந்தியாவிலே காஞ்சி முதல் காச்மீரம் வரை சுற்றுப்பிரயாணம் செய்து ஐந்து இடங்களில் மடம் அமைத்து, இந்துசமயமக்களை ஒற்றுமைப்படுத்திபாதுகாத்தகதை மிக ருசியானது.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்னாம் பூர்வாங்க பேச்சுக்களை

# பாரிஸில் 10-ந் திகதி நடத்தலாமென்ற ஹனோய் ஆலோசனையை அமெரிக்கா ஏற்றது

## சான் அன்டோனியோ திட்டமே அமெரிக்க நிலைக்கு அடிப்படையாகும்

வாஷிங்டன், மே 4

**வியட்னாம் பூர்வாங்கப் பேச்சுக்களைப் பாரிஸில் அடுத்த வெள்ளிக்கிழமை நடத்த ஒத்துக்கொண்டுள்ளதாக வட வியட்னாம், லாவோஸிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதியிடம் தெரிவித்துள்ள ஆலோசனையை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது.**

வியட்னாம் பிரச்னை சம்பந்தமான தமது பிரதான ஆலோசகர்களைக் கலந்தாலோசித்த பின்னர், நேற்று இத்தகவலை அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் இங்கு வெளியிட்டார்.

வியட்னாமில் போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்கும் இப்பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள், தென் கிழக்காசியாவில் அமைதியை நிலைநாட்ட உதவுமெனத் தாம் நம்புவதாகவும் திரு. ஜோன்சன் கூறினர்.

பாரிஸில் நடைபெறவிருக்கும் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளின் போது, வியட்னாம் போரில் சம்பந்தப்பட்டுள்ள மற்றக் கட்சிகளுடன் தொடர்புகள் கொள்வதற்கும் வசதிகள் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினர்.

**சான் அன்டோனியோ திட்டம்**

பூர்வாங்கப் பேச்சுக்கள் பற்றி வாஷிங்டன் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், அண்மையில் ஜோன்சன் வெளியிட்ட சான் அன்டோனியோ திட்டமே அமெரிக்கா எடுக்கும் கொள்கை நிலைக்கு அடிப்படையாக விளங்குமென்று குறிப்பிட்டார்.

சான் அன்டோனியோ திட்டத்தில், வட வியட்னாம் மீதான குண்டு வீச்சை நிறுத்திக்கொள்வதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. அந்தக் குண்டு வீச்சு நிறுத்தம் போது, வட வியட்னாம் அதைத் தனக்குச் சாதகமாகப் போரில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என வலியுறுத்தியும் இருந்தது.

## ஜனதிபதி நாஸரின் புதிய அரசியற் திருத்தங்கள்

### அமோக ஆதரவு

கெயிரோ, மே 4

ஐக்கிய அரபுக்குடியரசு ஜனதிபதி நாஸருக்கு, அவரது நாட்டு மக்கள் ஏகோபித்த ஆதரவை, ஒருபொதுஜன வாக்கெடுப்பின் மூலம் தெரிவித்துள்ளனர்.

ஐ. அ. கு. வுக்கான புதிய அரசியல் சீர்திருத்தங்கள் சிலவற்றை அண்மையில் ஜனதிபதி நாஸர் நாட்டுக்கு அறிவித்திருந்தார். அச் சீர்திருத்தங்கள்பற்றிய மக்களின் கருத்தை அறியும் பொருட்டு ஜனதிபதி, கடந்த வியாழனன்று, பொதுஜன வாக்கெடுப்புக்கு ஒழுங்கு செய்திருந்தார்.

அவ்வாக்கெடுப்பின் முடிவுகள் இப்போது வெளியாகியுள்ளன. நாட்டு மக்களின் 99 சதவீதத்தினர் நாஸரின் புதிய அரசியல் சீர்திருத்தங்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வாக்களித்துள்ளனர்.

சுமார் 70 லட்சத்துக்கு மதிகமான மக்கள் இவ்வகையில் தமது ஆதரவை வெளியிட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

## செக். ஜனதிபதி ரூபெக் மாஸ்கோ வந்து சேர்ந்தார்

மாஸ்கோ, மே. 4

செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய ஜனதிபதி ரூபெக் மாஸ்கோ வந்து சேர்ந்துள்ளார். அவர் ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

செக்கோஸ்லாவாக்கியாவில் அதிக சுதந்திரத்துக்கு வழிகோலும் புதிய அரசியல் திட்டங்களுக்கும் சீர்திருத்தங்களுக்கும் ஆதரவாக நடைபெற்ற அரசியல் மாறுதல்களுக்குப்பின் செக்கோஸ்லாவாக்கியத் தலைவர் ஒருவர் ரஷ்யா செல்வது இதுவே முதற்தடவையாகும்.

## 'நீண்ட காலத்துக்குப் பின் ஒரு நல்ல செய்தி'

### யூ. தாண்ட் கூறுகிறர்

பாரிஸ் பேச்சுவார்த்தைகள் பற்றி ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் குறிப்பிடுகையில், 'நீண்ட காலத்திற்குப் பின் நல்ல ஒரு செய்தி இது' என்றார். இதற்காக, சர்வதேசச் சமூகம் அமெரிக்கா, வட வியட்னாம் இரண்டுக்கும் நன்றியுடையதாக இருப்பதாகவும் யூ தாண்ட் கூறினர்.

வியட்னாமில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கு ஐ நா. தொடர்ந்து தன்னுலான முயற்சிகளை எடுக்குமென் றும் அவர் கூறினர்.

**பிரான்ஸ் அங்கீகாரம்**

வட வியட்னாம், அமெரிக்கப் பிரதிநிதிகள், பிரான்சுத் தலைநகரான பாரிஸில் சந்தித்துப் பேசுவதற்குப் பிரெஞ்சு அரசாங்கம் தனது அங்கீகாரத்தை அளித்துள்ளது.

**மாஸ்கோ கருத்து**

பாரிஸில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றி மாஸ்கோ ரேடியோ கருத்துத் தெரிவிக்கையில், இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான அமெரிக்காவின் உண்மையான ஆர்வம் பற்றித் தனது சந்தேகங்களை வெளியிட்டது.

**பாப்பரசர் வரவேற்ருர்**

வத்திக்கானில், பாரிஸில் பேச்சுவார்த்தைகள் பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. 'உலகத்துக்கு இது ஒரு பெரிய ஆறுதலான செய்தி' என்று பாப்பரசர் கூறியுள்ளார்.

**கென்னடி ஆலோசனை**

அமெரிக்க ஜனதிபதிப் பதவிக்குப் போட்டியிடும், காலஞ்சென்ற அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எவ். கென்னடியின் சகோதரரான திரு. ரொபேட் எவ். கென்னடி, வியட்னாம் சமாதானத்துக்கான இப்புதிய முன்னேற்றத்தைத் தாம் வரவேற்பதாகக் கூறினர்.

வியட்னாமில் போர் நிறுத்தத்தை மேற்பார்வை செய்யுமுகமாக அங்கு ஒரு சர்வதேச படை நிறுவப்பட வேண்டுமென அவர் ஆலோசனை தெரிவித்தார்.

வியட்னாமில் அமெரிக்கா பின்பற்றும் கொள்கையைத் தொடர்ந்து கண்டித்து வந்த அமெரிக்கத் தலைவர்களில் திரு. கென்னடி முக்கியமான ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடவியட்னாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தவேண்டுமெனவும் அவர் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்திருக்கிருர்.

**புதுடில்லியில்**

இந்தியத் தலைநகரான புதுடில்லியிலும், பாரிஸ் பேச்சுவார்த்தைகள் பற்றிய செய்திக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இப்பேச்சுவார்த்தைகள் வியட்னாம் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர உதவுமென இந்தியத் தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## கொரியாக்களுடன் ராஜிய உறவுகள்

### இந்தியா முடிவு

புதுடில்லி மே. 4

வடக்கு, தெற்கு கொரியாக்களுடன் இந்தியா விரைவில் ராஜதந்திர உறவுகள் மேற்கொள்ளவிருக்கிறது.

தென் கொரியத் தலைநகரான சியோனுக்கும் வட கொரியத் தலைநகரான பியோங்யாங்குக்கும் தான் அனுப்பவிருக்கும் ஸ்தானிகப் பொறுப்பாளர்களின் பெயர்களை இந்தியா விரைவில் அறிவிக்கும்.

# அமெரிக்காவில் இரண்டு மாற்று இருதயப் பொருத்தங்கள்

வாஷிங்டன், மே 4

அமெரிக்காவில் இரண்டு இருதய மாற்றுச் சத்திர சிகிச்சைகள் நடத்தப்பட்டுள்ளன.

டெக்ஸாஸில், மணமாகிய 15 வயது இளம் பெண்ணின் இருதயம், 48 வயது டைவர் ஒருவருக்கு மாற்றிப் பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கலிபோர்னியாவில், 40 வயது தச்சுத்தொழிலாளி ஒருவருக்கு, மாற்று இருதயப் பொருத்தம் செய்யப்பட்டபின், அவர் இப்போதும் உடல் நலமாக உயிருடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் முதலாவது மாற்று இருதயச் சிகிச்சை

லண்டன், மே 4

லண்டனில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில், பிரிட்டனின் முதலாவது மாற்று இருதயப் பொருத்தம் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத 45 வயதான ஒருவருக்கே இவ்விருதய மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**துருக்கியில்**

## உலகிலேயே முதலாவது மாற்றுப் பற்பொருத்தம்

அங்காரா, மே 4

துருக்கியில், முதற்தடவையாக, மனிதப்பற்கள் வெற்றிகரமாக மாற்றுப்பொருத்தம் செய்யப்பட்டுள்ளன.

வயது முதிர்ந்த பாட்டி ஒருவர், பள்ளிக்கூடமாணவி ஒருத்தியின் பற்கள் பொருத்தப்பட்டு, இப்போது 'நறுக் நறுக்' கென்று எந்தத் தின்பண்டத்தையும் சுவைத்துச் சாப்பிடுகிருரென அறிவிக்கப்பட்டுள்ளது,

## தென்னாபிரிக்காவில் 3-வது இருதய மாற்றுப் பொருத்தம்

கேப்டவுண், மே 4

உலகிலேயே முதல் முறையாக மாற்று இருதயச் சிகிச்சை நடத்திய தென்னாபிரிக்க டாக்டர் பேர்னாட் [illegible] மற்றுமொரு இருதய மாற்றுப் பொருத்த சிகிச்சை நடைபெற்றுள்ளது.

68 வயது நிரம்பிய ஒரு வயோதிபருக்குச் செய்யப்பட்டுள்ள இவ்விருதய மாற்றுப் பொருத்தச் சிகிச்சை, தென்னாபிரிக்காவில் மூன்றுவது சிகிச்சையாகும்.

## இந்திய யானைகள் ஏற்றுமதி

புதுடில்லி, மே. 4

இந்திய யானைகளின் ஏற்றுமதி, 1963—64க்கும் 1967—68க்குமிடையே 19லிருந்து 28க்கு உயர்ந்துள்ளது. இந்தவிற்பனைமூலம், அந்நியச்செலாவணி, ரூபா 1,32,000லிருந்து ரூபா 1,71 000க்கு இக்காலகட்டத்தில் அதிகரித்துள்ளது.

இந்த ஐந்து வருட காலத்தில் 88 யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் மூலம் கிடைத்துள்ள அந்நியச் செலாவணி ரூபா 5,56,000 ஆகும்.

மேற்கு ஜெர்மனியும், கிழக்கு ஜெர்மனியுமே ஆகக் கூடுதலான யானைகளை இறக்குமதி செய்தன.

## கட்டுரை கவிதைப் போட்டி

குரும்பசிட்டி, சனி

யாழ். வள்ளுவர் தமிழ் மன்றம் அடுத்தமாதம் நடாத்தவிருக்கும் வள்ளுவர் விழாவையொட்டி கவிதை, கட்டுரை, மனனப் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது. கட்டுரைப் போட்டி மூன்று பிரிவுகளாகவும். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்" என்ற தலைப்பில் கவிதைப் போட்டியும் நடைபெற இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உணவு உற்பத்திக்கு

## வேற்றுமைகளை விடுத்து ஒத்துழைப்பு வழங்குக"

— உடுவில் எம். பி.

குரும்பசிட்டி, சனி

"நாட்டில் தற்போது எழுந்துள்ள உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் கட்சி பேதம் பாராட்டாது மக்கள் சகலரும் ஒத்துழைப்பு நல்கி உணவு உற்பத்தித்துறையில் ஊக்கம் செலுத்த வேண்டும். சாதி, இன, சமய அடிப்படையில் வேற்றுமைகளை இத்துறையில் ஏற்படுத்தாது தேச நலனில் அக்கறை கொண்டு மக்கள் உழைத்தல்வேண்டும்" என ஏழாலை வடக்கு சனசமூக நிலைய 14-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் திரு. க. யோ. பாலகந்தரம் தலைமையில் இவ்விழா சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில், அரசியல், கட்சிப் பற்றற்ற முறையில் சனசமூக நிலையங்கள் இயங்கவேண்டுமென்றும், கிராமவளர்ச்சிக்கு மக்கள் ஒற்றுமையாக சனசமூக நிலையங்களில் ஈடுபட்டு செயலாற்ற வேண்டுமென்றும் கலை, கலாச்சாரத் துறை வளர்ச்சிக்கும், மக்களின் அறிவு அபிவிருத்திக்கும் பொதுசன நிலையங்கள் தொண்டாற்றவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வலி. வடக்கு காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக், கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு, கிராம சேவையாளர் திரு. என். நடராசா, திரு. ரி. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூகநிலையத்தின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏபிராம் லிங்கன், உபதலைவர்: திரு. எம். பிலிப்ரூேஸ், செயலாளர்கள்: திரு. ஆ. மாட்டின், இணைச்செயலாளர்: திரு. பிலிப் அன்ரன், பொருளாளர்: திரு. செ. ஞானதாஸ், நிலைய பொறுப்பாளர்கள்: திரு. அருளானந்தம், செ. றேக். 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ

சுன்னாகம், சனி

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர்: மு. தர்மலிங்கம், உபதலைவர்கள்: அ. முருகேசு, மா. கந்தசாமி, காரியதரிசி: சி. சிவஞானம், இணைக்காரியதரிசி: மி. ஆறுமுகம், தனாதிகாரி: சி. கதிரவேலு, பொறுப்பாளர்கள்: நா. இரத்தினம், க. மகேசன். 13 பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

ஃ ஃ

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோண்டாவில் வடக்கு மாதர் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி நடேஸ்வரி செல்லையா, உபதலைவர்: திருமதி இராசம்மா பொன்னுத்துரை, காரியதரிசி: திருமதி குணேஸ்வரி துரைராஜா, உபகாரியதரிசி: செல்வி: க. இராஜலட்சுமி, தனாதிகாரி: செல்வி ஆனந்ததேவி தம்பிராசா. 15 பேர் கொண்ட கமிட்டி அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேம்பிராய் விவசாய அபிவிருத்திக் கழக நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. ந. பரமானந்தன், தலைவர்: திரு. க. ச. கந்தவனம், உபதலைவர்: திரு. ஆ. மார்க்கண்டு, செயலாளர்: திரு. பொ. மயில்வாகனம், உபசெயலாளர்: திரு. க. கயிலாபிள்ளை, தனாதிகாரி: திரு. வீ. வடிவேல். 5 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## விநாயகபுரம் உதயமாகும்

உடுவில், சனி

"கிளிநொச்சி, கரைச்சி பகுதிகளில் இனிமேல் குடியேற்றத்துக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகள் உள்ள நல்ல நிலம் இல்லை. துணுக்காய், பூநகரிப் பகுதிகளில் மட்டுமே நல்லநிலம் தற்போது உண்டு. விநாயகபுரத்தில் உங்களுக்குக் கிடைத்திருக்கும் நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள நிலம். அரசாங்கத்தினர் பணவசதிகளையும் நீர்ப்பாசன வசதிகளையும் உங்களுக்கு அளிக்கும்போது நீங்கள் அவற்றை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

500-க்கு அதிகப்படியான தொகையுள்ள கரியாலை நாகபடுவான் குடியேற்றவாசிகள் மத்தியில் அவர்கள் வேலைகளைத் துரிதப்படுத்தும்பொருட்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கரியாலை நாகபடுவான் குடியேற்றத்திட்ட வாசிகளை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பல்லவராயன்கட்டில் சந்தித்து அக்குடியேற்றத் திட்டத்தின் அபிவிருத்தி வேலை விஷயங்கள் பலவற்றை கலந்தாலோசித்தார்.

இச்சந்திப்பின் விளைவாக கரியாலை, நாகபடுவான் குடியேற்றத்திட்டத்துக்கு 'விநாயகபுரம்' என புதிய பெயர் இடப்படவேண்டும் எனவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, சனி

அல்வாய் மனோகரா சனசமூகநிலையத்தின் வருடாந்தக் கூட்டம் அல்வாய் வடக்குக் கிராமசேவையாளர் திரு. வ. சிவபாதவிருதயர் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் திரு. வ. சிவபாதவிருதயர், உபதலைவர்: திரு. மா. சிவானந்தம், இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் க. ஆனந்தராசா, க. மகேஸ்வரன், இலக்கியம், விளையாட்டுக் காரியதரிசி: திரு. ம. கணேசலிங்கம், நாடகக் காரியதரிசி: திரு. மு. செ. விவேகானந்தன், தனாதிகாரி: திரு. யே. சத்தியநாதன், கணக்குப்பரிசோதகர்: திரு. தி. ம. சிவகுருநாதன், நிலையப் பொறுப்பாளர்கள்: திருவாளர்கள் ச. சிவதாஸ், த. கலாமணி.

## மேதின ஆசீர்வாதம்

வல்வெட்டித்துறை, சனி

கத்தோலிக்க மக்களுக்குரிய மே தினம் பருத்தித்துறையில் கொண்டாடப்பட்டது. தொழிலாளர்களின் உபகரணங்களை ஆசீர்வதிப்பதற்காக இரண்டு இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு சக்கோட்டை கடற்கரையிலும், சென். தோமஸ் கடற்கரையிலும் வைத்து ஏராளமான கட்டுமரங்களையும், இயந்திரப் படகுகளையும் பங்கு குரவர் வண. பிதா. தேவராசஜன் ஆசீர்வதித்தார்.

## உத்தரவின்றி அடைவுபிடித்தார்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமனாற்றைச் சேர்ந்த கந்தையா செல்லையா என்பவர் அனுமதியின்றி நகை அடைவுபிடித்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா ரூபா 100 அபராதம் விதித்தார்.

## கவிதைத் தொகுப்பு

குரும்பசிட்டி, சனி

யாழ். இலக்கிய நண்பர் கழகத்தினர் ஈழத்து இளம் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புநூல் ஒன்றினை வெளியிடவிருக்கின்றனர். இந்நூலில் கவிதைகளைசேர்த்துக்கொள்ளவிரும்பும் இளம் கவிஞர்கள் கழகச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

## "சமூகசீர்திருத்த நாடகங்களில் கவனம் செலுத்த வேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஒரு சமுதாயத்தின் பின்தங்கிய சக்திகளை அகற்றவும், நல்ல வழியில் மக்களைக் கொண்டுசெல்லவும் நாடகங்களினால் முடியும். இதற்குச் சனசமூக நிலையங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் முன்வரவேண்டும்"

இவ்வாறு திருநெல்வேலி வாலையம்மன் சனசமூகநிலையத்தினதும் கலாஜோதி நாடக மன்றத்தினதும் திறந்த வெளி அரங்கிற்கான அத்திவாரக்கல்லை நாட்டிவைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளைநாயகம் தெரிவித்தார்;

நல்லூர் கிராமசபை முன்னாள் தலைவர் திரு. கி. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. புள்ளைநாயகம் மேலும் பேசுகையில், சமுதாயத்தைச் சீர்திருத்தக்கூடிய புதிய சமூக நாடகங்களையும் மேடையேற்றுவதில் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென்றும், இதற்கு அரசாங்கமே பிரதேச கலாமன்றங்கள் மூலம் நன்கொடை வழங்கி வருகின்றதென்றும் தெரிவித்தார்.

கிராமமுன்னேற்ற உத்தியோகத்தர் திரு. நடராஜா, திரு. க. அப்புத்துரை, இரா. யோகேந்திரநாதன், வை. இராமநாதன், நடராஜா மன்றச் செயலாளர் திரு. இ. சண்முகநாதன் ஆகியோரும் பேசினர். [கா. நி.]

## இன்று பண்ணிசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் 3-ம் திருவிழாவான இன்று பகல் விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இரவுசுவாமி வீதிவலம் வருதலுடன் விசேஷநிகழ்ச்சிகளும் இடம்பெறும். என். கே. பதிமநாதன் குழுவினரின் நாதசுரக் கச்சேரியும், வி. தெட்சணாமூர்த்தியின் மேளக்கச்சேரியும், பின்னர் 10-30மணிக்கு காஞ்சிபுரம்மெய்கண்டாதீன வித்துவான் தேவாரமணி, தமிழிசைமணி பி. ஏ. எஸ். ராஜசேகரன் குழுவினரின் தேவார இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

## இந்திய சேலைகள் இருந்தனவாம்

வல்வெட்டித்துறை சனி

வல்வெட்டிப் பொலிசாருக்குக்கிடைத்த இரகசியதகவலைத் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் வியனகே, சார்ஜண்ட் பீற்றர் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறையிலுள்ள ஒரு வீட்டைச் சோதனையிட்ட போது அங்கு இந்தியச்சேலைகளும்வேட்டிகளும் கொண்ட பார்சல்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டதாம். இதுசம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.


# ரேக்

நேரடிக் களை கொல்லி

உபயோகித்து

# நெல் விளைவைப் பெருக்குங்கள்



ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை பின் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.



நேரடிக் கொல்லியான ரேக்கினையே உபயோகியுங்கள். நெல் விளைவு பெருகும்.

M

மொன்சன்ரோ கொம்பனியின் வர்த்தகக் குறி.

MC 2/67 A.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

சித்தங்கேணி சிவன் கோவில் மெயின்ரோட்டில், அரசும்கேணியும் உள்ள, நாகராசாக்குருக்கள்இருந்த வீடு,கிணறு உட்பட 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.விபரங்களுக்கு, படிகலிங்க சர்மா, அம்மன் கோவில், சுதுமலை. 1536

### தேவை

நடிக, நடிகையர்:

யாழ்.சரவணபவா தயாரிக்கும் "கடைசிவரைஉறவு" நாடகத்திற்கு நடிக நடிகையர் தேவை. இராசையா, 187/1, மானிப்பாய்வீதி, ஒட்டுமடம்,வண்ணை. 1534

### விற்பனைக்கு

மோட்டார் லோரு:

வேகமாய்ஓடக்கூடிய பி.6 என்ஜின் உள்ள பெரிய லோரு ஒன்று விற்பனைக்கு இருக்கிறது. என்ஜின் தனித்தும் கொடுக்கப்படும். பின்வரும் விலாசங்களில் தொடர்பு கொள்ளவும். 1. கா.க.விசுவலிங்கம்,170, கஸ்டம்ஸ் ரோட், திருக்கோணமலை. 2. பாலாவோடை, காரைநகர்.1468

காணி:

பருத்தித்துறை விநாயக முதலியார்தெருவில்,சந்தை பள்ளிக்கூடங்களுக்கு அண்மையில், மெதடிஸ்த மிஷனுக்குச் சொந்தமான 1 3/4 பரப்பு ஆதனம் விற்பனைக்குண்டு. குடியிருப்புக்கேற்ற ஒரு பழைய வீடும் ஒரு மண்டபமும் கிணறும் உண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். திரு. W.N.S. சாமுவேல், தபாற்கந்தோர் வீதி, பருத்தித்துறை. 1535

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
NINE HOURS TO RAMA
மகாத்மாவின்
இறுதி சரிதம்
[இரு நாட்கள் மட்டும்]

MANOHARA
JAFFNA
Daily at
2-30, 6-30, &9-45 P. M.
Ashok Kumar, Nutan, Dharminder
in
BANDINI
(Hindi)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில்4காட்சி
சிவாஜிகணேசன்
டி. ஆர். ராஜகுமாரி
கண்ணும்மா
எஸ்.எஸ். ராஜேந்திரன்
காகா ராதாகிருஷ்ணன்
நடிக்கும்
மனோகரா




## மரதன் ஓட்டவீரர் வரதராசா

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 19வது வருடாந்த விழாவையொட்டி நேற்று நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் 40 நிமிடங்களில் 5மைல் தூரத்தை ஓடிமுடித்த சிறுவன் கனகரத்தினம் வரதராசாவை இப் படத்தில் காணலாம். 10வயதுச் சிறுவனான வரதராசா கடந்த வருடம் இந்நிலையம் நடத்திய மரதன் ஓட்டப்போட்டியிலும் சிறந்த மரதன் ஓட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டு பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (வி. நி)

## மரதன்ஓட்டப் போட்டியில் சிறுவர்கள் சாதனை

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 19வது வருடாந்த விழாவையொட்டி நேற்றுக்காலை நடைபெற்ற 5மைல் மரதன் ஓட்டப்போட்டியில் நூற்றுக்கணக்கான இலங்கை மரதன் ஓட்டவீரர்கள் கலந்து கொண்டார்கள். இப் போட்டியில் கலந்துகொண்ட கனகரத்தினம் வரதராஜா, அ. ஞானப்பிரகாசர் என்னும் இரு 10 வயதுச் சிறுவர்கள் 40நிமிடத்தில் 5மைலை ஓடிமுடித்து இப்போட்டியில் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளனர். சென்றவருடம் நடைபெற்ற போட்டியிலும் கனகரத்தினம் வரதராசா என்ற சிறுவன் சிறந்த மரதன் ஓட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற இம்மரதன்ஓட்டபொதுப்போட்டியில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஐ. பரமேஸ்வரன் 28 நிமிடத்தில் 5மைல் தூரத்தை ஓடிமுடித்து முதலாவது இடத்தைப் பெற்ருர். மற்றும் தெல்லிப்பழையைச் சேர்ந்த சி. சாம்பமூர்த்தி இரண்டாம் இடத்தையும், கட்டப்பிராயைச் சேர்ந்த எஸ். கனகசபாபதி மூன்ரும்இடத்தையும், கட்டப்பிராய் கலைமணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆ. மகாலிங்கம் 4ம் இடத்தையும் பெற்றனர்.

உள்ளூர் போட்டியில் நல்லூர் தெற்குச் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். கனகராசா முதலாம் இடத்தைப் பெற்ருர். மற்றும் புஷ்பகாந்தன் வே. பஞ்சலிங்கம், இ ஸ்ரீகாந்தன், ந. ஆனந்தராசா ஆகியோரும் முறையே அடுத்த இடங்களைப் பெற்றனர். (வி. நி)

## புனருத்தாரணம் செய்ய முயற்சி

உடுவில், சனி

துணுக்காய் பிரிவிலுள்ள யோகபுரம் குடியேற்றத் திட்டத்தில் காணப்பட்ட பழைய புராதன சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு ஆலயத்திருப்பணிச் சபையினர் அரசாங்கத்திடமிருந்து பத்து ஏக்கர் நிலம் வழங்குமாறு கேட்டுள்ளனர்.

இதுவிஷயம் சம்பந்தமாக புதைபொருள் ஆராய்ச்சி உத்தியோகத்தர், யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு. இ. முருகேசபிள்ளை ஆகியோர் இம்மாதம் 22 ந்திகதி மேற்படி ஸ்தலத்தைச் சென்று பார்வையிட்டனர். அங்கே பழைய சிவாலயத்தின் அத்திவாரங்களும், பிரகார தெய்வங்களின் ஆதி அத்திவாரங்களும், புத்தவிகாரை அத்திவாரங்களும் காணப்பட்டன. மேற்படி சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கமும் சதுரமான ஆவுடையாரும் தற்போதை... புதையில் வைக்கப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டம்

## போட்டி நடுவில் பகிஷ்கரித்து கொழும்பு கோஷ்டி வெளியேறியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பு றட்னம் கூட்டு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் முஸ்லிம் ரைக்கர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மத்தியஸ்தரின் கட்டுப்பாட்டுக் கமையாத கொழும்புக் கோஷ்டி போட்டியை பகிஷ்கரித்து மைதானத்தை விட்டு வெளியேறியது.

யாழ்ப்பாணம் ஜின்னு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டி திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் ஆரம்பமானது. போட்டி ஆரம்பமாகுமுன் காலம் சென்ற திரு. யு. எம். ஐ. ஐதுறூஸ்க்கு 2 நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது இடைவேளைவரைக்கும் கடும் மோதலாகக் காணப்பட்ட இப் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியினர் அருமையாக ஆடி இடைவேளையின்போது கொழும்பு ஒருகோல் பெற்றிருக்கத் தக்கதாக 5 கோல்கள்பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டியில் கொழும்பு வீரர்களின் ஆட்டம் ரசிகர்களுக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய வகையில் அமைந்திருந்தது. அவர்களின் ஒழுங்கற்ற ஆட்டத்துக்கு ரசிகர்களிடையே பலத்த எதிர்ப்பும் காணப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தர் ஒருசில கொழும்பு வீரர்களை எச்சரிக்கை செய்தார். இக் கட்டத்தில் மத்தியஸ்தரின் கட்டுப்பாட்டுக்கு அமைய மறுத்த சில கொழும்பு விரர்கள் ஆட்டம் முடிய 10 நிமிடங்கள் இருக்கும்பொழுது கோஷ்டியை பகிஷ்கரித்து மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

இப்போட்டிக்கு திரு.எஸ். ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றிஞர். விநி

ஹாக்கி

## இரு போட்டிகளிலும் வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாவட்ட ஹாக்கி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் கிருஸ்கொப்பேல் விளையாட்டுக் கழகத்துக்கும் கடற்படைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு ஹாக்கி மோதலில் இரு கோஷ்டியினரும்கடுமையாக மோதி தலா 2—2 கோல்கள் பெற்றனர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்குடாக்டர் திரு ரி. துரைசிங்கம். திரு எஸ். சுதேசநாதன் ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கடற்படை வீரர் கோஷ்டிக்கும் பொலிஸ் வீரர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மற்ரெரு காரசாரமான ஹாக்கிப் போட்டியில் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இரு கோஷ்டி வீரர்களும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடி இருதரப்பினரும் ஒரு கோலும் போடாத வகையில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டிக்கு திரு வி. ரி. கணேசலிங்கமும், திரு எஸ் சுதேசநாதனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (வி. நி)

## வடமர் இலக்கியவட்டம்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி வரணி கலைக்கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள வடமர் இலக்கிய வட்டத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

காப்பாளர்- உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி யுமான திரு. மு. சிவசிதம்பரம், தலைவர்- பண்டிதர் க. வீரகத்தி, துணைத்தலைவர்கள்- பண்டிதர் குமாரவேலர், பண்டிதர் பொன் கணேசன், இணைச்செயலாளர்கள்- சைவப்புலவர் செ. யோகராசா, (யோகன்), சைவப்புலவர் செல்வி காமாட்சி ஆறுமுகம். பொருளாளர்- சைவப்புலவர் சு. திரவியம், செயற்குழு உறுப்பினர்கள்- திருவாளர்கள் மன்னவன் மு. கந்தப்பு, வ. சிவராசன்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!
கெப்பிட்டல் பிளாஸா
[கொழும்பு]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
தினசரி: 2-30, 6-15, 9-30 மணி.
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
நடித்த
பெற்ருல்தான் பிள்ளையா

கிங்ஸ்லி [கொழும்பு]
சிவாஜிகணேசன், சாவித்திரி
நடித்த
பாசமலர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை மர ஸ்குறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என்.வைத்திலிங்கம்நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசியல் கலந்தபணி திருப்திதராது'

## உடுவில் எம். பி. பேச்சு

அளவெட்டி, சனி

''சனசமூக நிலையங்கள் அரசியல் வேறுபாடுகளைத் துறந்து அரசியல் கலப்பற்ற விதத்தில் சமுதாயத்திற்கு உரிய பணியைச் சிறப்பாக ஆற்ற வேண்டும். அரசியல் கலப்பான விதத்தில் செய்யப்படும் பணிகள் பூரண திருப்தியைத் தராது. ஆகையால் சனசமூக நிலையங்கள் அரசியல் குரோதங்களை மறந்து சேவையாற்றல் வேண்டும்.''

இவ்வாறு ஏழாலைவடக்கு சனசமூக நிலையத்தின் 14-வது ஆண்டு நிறைவு விழாவில் உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்றிரவு நடைபெற்ற இவ்விழாவிற்கு கே. பாலசுந்தரம் தலைமை வகித்தார்.

திரு தர்மலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:- சனசமூக நிலையங்கள் மக்களின் அறிவு விருத்திக்காக பிரதி வாரமும் விடுமுறை தினங்களில் அறிஞர்களின் சொற்பொழிவாற்றும் கருத்தரங்குகளை நடாத்த முன்வர வேண்டும். கலை கலாச்சார வளர்ச்சிக்குப் பாடுபடும் சனசமூக நிலையங்கள் நாட்டில் நிலவுகின்ற உணவுத் தட்டுப்பாட்டை நீக்கத் தம்மாலான ஒத்துழைப்பை அளிக்க முன்வர வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க இந்நாட்டு மக்கள் அனைவரும் உழைக்கவேண்டும்.

வலி. வடக்குக்காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் பேசுகையில், ''உணவு உற்பத்தியில் நமது நாடுதன்னிறைவு பெற சனசமூக நிலையங்கள் கூடியவரையில் ஒத்துழைக்கவேண்டும் என்ரூர். பிரமாண்டமானவிழாக்களைக்கொண்டாடுவதில் மட்டும்நேரத்தைச்செலவிடாது இராமந்தோறும் சிரணிப் படையை அமைத்து கிராம வளர்ச்சிக்கு உழைத்தல் விரும்பத்தக்கதென்றும் அவர் சொன்னர்,

இவ்விழாவில் திருவாளர்கள் செல்லத்துரை, நாகேந்தன், ஏழாலை இராமச்சங்கத்தலைவர் சிவகுரு, ஏழாலை கிராம சேவகர் திரு. நடராசா உட்பட பலரும்உரையாற்றினர்.

நாடகம், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# 'சமுதாயப் புரட்சியை ஆசிரியர்ஏற்படுத்தவேண்டும்'

## உபசபாநாயகர் கூறுகிருர்

## மாவட்ட சபை பற்றியும் கருத்து

குரும்பசிட்டி, சனி

'தென்னிலங்கையில் 1956-ம் ஆண்டின் பின்னர் சமுதாயப் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் கொள்கைகளும் தென்னிலங்கை ஆசிரியர் சமூகத்தவர் மத்தியில் உண்டான விழிப்புணர்ச்சியுமே காரணமாக அமைந்திருந்தன. பண்டாரநாயகாவின் கொள்கைகள் தமிழ் இனத்தவர்களுக்கு பாதகமான முறையில் இருந்தாலும் சமூகப் புரட்சிக்கு வழிகோலியதாக இருந்தன. இதேபோன்று வட இலங்கையிலும் ஆசிரியர் சமூகம் முன்னின்று நடத்தி சமுதாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். சிந்திக்கும் சுதந்திரமுள்ள ஆசிரியர் இன்னும் செயல்படாது இருப்பது கவலைக்குரியது'

ஏழாலை வடக்கில் அகில இலங்கைசுவீகரிக்கப் பெற்ற தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் சங்கத்தினர் அளித்த வரவேற்பு உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி யுமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு சிவசிதம்பரம் மேலும் பேசியதாவது:-

உலகத்தில் ஆசிரியர்களுக்கு தகுந்த மதிப்பு வழங்கப்படுவதாக இல்லை கடமைப்பற்றை உணர்ந்து செயலாற்றும் ஆசிரியர் சமூகம் முன்னேறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கல்வி இலாகா அரசாங்க ஊழியர்கள் ஆசிரியர்களை மதிக்கின்றனர் இல்லை. இவர்களை நசுக்குவதிலும் கஷ்டப்படுத்துவதிலும் கண்ணுக இருகின்றனர். கல்வியின் தரத்தை நாட்டில் உயர்த்த ஆசிரியரின் தரமும் உயர்த்தப்படவேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளில் ஆசிரியர் இட மாற்றமே, கிடையாது. எமது நாட்டில் பெயருக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருதடவை ஆசிரியர் பயிற்சி வகுப்புகளை கல்வி இலாகா நடாத்தி வருகின்றனர்.

தமிழ்ப்பகுதியில் தான் கல்வித்தரம் உயர்ந்த நிலையில் இருக்கின்றது என பெருமை பேசும் நாம் தொடர்ந்தும் பெருமை பேசி வரலாமோ என்ற பயம் தற்போது எழுந்துள்ளது. எனவே அன்னியர் ஆட்சி காலத்தில் தமிழ் மொழியைப் பேணிப்பாதுகாத்த தமிழாசிரியர் தற்போதைய நிலையிலும் தமிழ் மொழியைப் பாதுகாக்க முன்வரவேண்டும். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தின் அடிப்படையில் இடமாற்றத்திட்டத்தை உருவாக்கவேண்டும். இதனை அமுலாக்க பாராளுமன்ற உறுப்பினர்களால் இலகுவில் முடியும்.

மாவட்டசபை மசோதா கிணறுவெட்ட பூதம் கிளம்பியது போல அமையப் போகின்றது. வடமாகாணத்தில் நாம் எந்தக் கட்டத்திலும் தமிழராக வாழலாம். ஆனல் கிழக்கு மாகாணத்தில் இந்நிலை நீடிக்கமுடியாது. அங்குள்ள சிங்கள-முஸ்லிம் மக்கள் எந்தநேரத்திலும் வழக்கம் போல ஒன்று சேர்ந்து தமிழர் நிலை என்னவாகும்? இன்றைய அரசாங்கம் பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டு மற்ருெரு அரசாங்கம் பதவியேற்றல் தமிழ் மக்கள் மாவட்டசபை மசோதாவால் விமோசனம் பெற முடியுமா?

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காசியிலே கங்கையில் ஸ்நானம் செய்ய ஆதிசங்கரர் தமது சிஷியர்களுடன் அதிகாலையில் செல்லுகையில், ஒரு 'சண்டாளன்' [ஹரிஜன்] எதிரேவந்ததும் 'விலகு விலகு' என்ருராம் சங்கரர். எதிரில் வந்தவர் உடனே 'நம் இருவர் சரீரமும் அன்னமயமானது. இதை விலகச் சொல்கிறீர்களா? அல்லது நம் உடலில் கோவில் கொண்டுள்ள தெய்வ ஜோதிகள் விலக வேண்டுமா?' என்று கேட்டதும், ஸ்ரீ சங்கரர் திடுக்கிட்டு உண்மையை உணர்ந்து, எதிரே வந்தவர் காலில் விழுந்து. ''என்கண்களைத் திறந்துவிட்ட குருநாதனே'' என்று கூறியதும், வந்த ஹரிஜன் மறைந்து, சிவபெருமானுகக்காட்சியளித்ததாக அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை, சேங்காளபுரம் ஸ்ரீ அனந்தராமதீட்சதர் மறு நாள் இரவு திருச்சி ரேடியோவில் பேசியதைக் கேட்டேன். இதற்கு ஆதாரமாகப் பல சுலோகங்களை அவர் கூறினர். தீண்டாமையை பிடிவாதகமாக ஆதரிப்பவர்களுக்கு இது ஒரு அர்ப்பணம்.

ஃ ஃ ஃ

பார்த்திருந் தடியனேன்
நான் பரவுவன் பாடி யாடி
மூர்த்தியே என்பன்
உன்னை மூவரில்
முதல்வன் என்பன்,
ஏத்துவார் இடர்கள்
தீர்ப்பாய் தில்லைச்
சிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்
காண்பான் கூட
நான் வந்தவாறே.
—அப்பர் சுவாமிகள்

நுணசை முருகமூர்த்தி கோவில் உற்சவம்:

# 'திருவருள் பெறுவதற்கு திருவடியைசிந்திக்கவேண்டும்'

அளவெட்டி, சனி

''திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், தொண்டர் புராணங்களை மாணவர்கள் சிந்தித்துப் படிக்கவேண்டும். முருகன் சந்நிதியில், முருகன் திருவருள் பெற, முருகன் திருவடியை உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும்.''

இவ்வாறு 'திருவள்ளுவர் வழிச் சேக்கிழார்' என்னும் பொருள் பற்றி வித்துவான் திரு மு. சபாரத்தினம் மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் 4ம் நாள் விழாவில் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

பல பகுதியிலுமிருந்து வந்த ஆண்கள், பெண்கள் உட்பட இவ்விழாவில் 500க்கு மேற்பட்ட பக்தர்கள் ஒன்றுகூடி சுமார் ஒன்றரை மணித்தியாலம்வரை பக்தி ததும்பக் கூட்டு வழிபாடு செய்தனர். மேலும் வீதியில் அமைந்திருக்கும் பழமை பொருந்திய கடம்ப மரத்தில் வேல் முருகனுக்கு விசேஷ பூசையும் நடைபெற்றது.

திரு. மு. சபாரத்தினம் தொடர்ந்து பேசுகையில் வள்ளுவர் குறளின் பெருமையையும், புகழையும் விளக்கி வாழ்க்கையில் எப்படிப் பெண்கள் ஒழுகவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் புராணத்தில் சிறுத்தொண்டர் நாயனர் பற்றி எடுத்துக்காட்டியும், அன்புநிலை, அருள்நிலைக்குத் திருநாவுக்கரசுநாயனர், கண்ணப்பர் ஆகியவர்களது நிலையையும் விளக்கினர்.

இதையடுத்து அன்னதானமும் வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

### இன்று

அளவெட்டி, ஞாயிறு

'எல்லாம் அவன் செயல்' என்னும் பொருள் பற்றி பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம், சமயச் சொற்பொழிவாற்றுவார். இதையடுத்து அடியார்களுக்கு அன்னதானமும், இதையடுத்து முருகன் திருவுலாவும் இடம்பெறும்.

# சிறுபாண்மைத்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

இத் திறப்பு விழாவை யடுத்து நிலயத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் எட்டாவது வருடாந்த விழா நடைபெற்றது.

அமைச்சர் திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சிரமமான முறையில் தையல் நிலயத்தை அமைத்த உங்களைப் பாராட்டுகிறேன். கொக்குவில் கிராம சபையினர் மூலம் இப்பகுதி மக்களின் உடனடி அபிவிருத்திக்காக ரூபா ஐம்பதாயிரத்தை எனது அமைச்சு வழங்க நிதி ஒதுக்கீடு செய்கின்றேன். ஏனைய கோரிக்கைகளை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கிராம சபையாரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றித்தருவார் என வாக்குறுதியளிக்கிறேன்.

# கூட்டுறவு பேங்க்

புதுடில்லி, மே 4

வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியவம்சாவளியினரின் நன்மையைக் கருதி, கூட்டுறவு 'பேங்க்' ஒன்றை அமைக்க இந்திய மறுவாழ்வுத்துறை அமைச்சு முடிவுசெய்திருக்கிறது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்திய வம்சாவளியினரும் இத்திட்டத்தால் நன்மையடைவார்கள்.

# இளைஞன் மரணத்தில் சந்தேகம்?

அளவெட்டி, சனி

பலாலியைச் சேர்ந்த குழந்தையன் வேலயா என்னும் இளைஞனின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய காங்கேசன்துறைப் பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு இம்மரணம் சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டு, இறந்தவரின் உள்ளுறுப்புக்களைப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொண்டார்,

மேற்படி இளைஞன் வெளியில் சென்றுவிட்டு வீட்டில் வந்து இருந்தபோது வாந்தி எடுத்ததாகவும் வாந்தியில் கிருமிநாசினியின் மணம் இருந்ததாகவும் மயக்கமடைந்த அவரைக் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது. மரணமான இளைஞனின் மனைவி அன்னம்மா, தாய் செல்லம்மா, தந்தைகுழந்தையன், மாமன் வெள்ளையன் ஆகியோர் உட்பட ஏழுபேர் சாட்சியமளித்தனர்.

இளைஞனின் உடலைப்பரிசோதனைசெய்த காங்கேசன்துறை அரசினர்வைத்தியசாலை மாவட்ட உதவி வைத்திய அதிகாரி திரு. என். சிவசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் மரணத்திற்கான காரணத்தைத் தம்மால் கூறமுடியாதிருப்பதாகச்சொன்னர்,

இதைத்தொடர்ந்துமரண விசாரணை அதிகாரி இம் மரணம் சம்பந்தமாக தொடர்ந்து விசாரணைசெய்யுமாறு பொலிசாரிடம் கூறி உடல் உள் உறுப்புக்களை கொழும்புக்குப் பரிசோதனைக்கு அனுப்பும்படியும் பரிசோதனை முடிந்தபின் மல்லாகம்நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டார்.

கொக்குவிலில்

# ரூ. 8 ஆயிரம்பெறுமதியான வைர மோதிரம் திருட்டு

நல்லூர், வெள்ளி

8000 ரூபா பெறுமதியான வைரக்கல் மோதிரத்தைக் களவாடினராம் வீட்டு வேலைக்காரச் சிறுவன் ஒருவர். அவரைக் கைது செய்ய பொலிஸார் கல்கமுவைக்குச் சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி ஆனைக்கோட்டைப் பொலிஸில் செய்யப்பட்ட புகார் யோகேஸ்வரி இராசையா என்பவருக்குச் சொந்தமான 8000 ரூபா பெறுமதியான வைரக்கல் மோதிரத்தை அவரிடம் வேலைசெய்து வந்த முனசிங்கா என்ற சிறுவன் களவாடிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரைக் கைது செய்ய ஆனைக்கோட்டைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயதிலகாவும் பொலிஸ் கான்ஸ்டபிள் இராமுவும் கல்கமுவைக்குச் சென்றுள்ளனர்.

பலாத்காரவழக்கில்

# எதிரி விடுதலை

சாவகச்சேரி, சனி

'சம்பவதினம் காலை எங்கள்வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி இராசலிங்கம் தன்னுடன் வரும்படி கேட்டார். நான் குளறினேன். அச்சத்தம் கேட்டு அங்கு வந்த எனது பெற்ருேரைக் கண்டதும் எதிரி சென்றுவிட்டார்.''

பளை — போக்கறும்பு பலாத்காரவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த கதிர்காமு பெண் சரஸ்வதி என்ற 18 வயது இளம் பெண் மேற்கண்டவாறுகூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜனவரி 16-ம் திகதி பளைபிலுள்ள போக்கறுப்பு என்ற இடத்தில் வசிக்கும் சரஸ்வதி என்ற இளம் பெண் மீது பலாத்காரம் புரிந்ததாக அம்பலவணர் ராசலிங்கம் அல்லது ஐயம்பிள்ளை என்ற வாலிபர்மீது பளைப் பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்காளிதரப்பில் பளை பொலிஸ் சார்ஜண்ட் திரு. ஈ. பெரேரா வழக்கை நடாத்தினர் இக்கட்டத்திலெதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார் மாஜிஸ்திரேட்.

இதைத்தி— 'ஈழநாடு' ... 68-ம் ... 1968-ம் ... மே மாதம் 5-ம் திகதி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org